3. தகவல் கோரல்.

விளுக்களுக்கு விடையளிப்பதில் தாமதம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : என்னுடைய கேள்விகள் கொடுத்து வெகு நாட்களாகியும், இன்னும் அவற்றிற்கு பதில் வரவில்லை. கேள்விகள் லிஸ்டில் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருங்கள் சொல்லுகிறேன். கேள்விகள் நிறைய கொடுக்கப்பட்டிருக்கின்றன. தங்கள் கேள்விகள் இன்னும் அவைக்கு வரவில்லை என்று உறுப்பினர்களிடமிருந்து நிறைய செய்திகள் வந்து இருக்கின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டது போல், 41-வது விதியின் கீழ் விவரங்கள் கொடுக்க எந்த, எந்த அமைச்சர் இடத்தில் எத்தனை எத்தனை அறிக்கைகள் பாக்கியிருக்கின்றன என்கிற விவரம் தெரிவிக்குமாறு கேட்டிருக்கிறேன். அமைச்சர்களெல்லாம் பேரவைத் தலைவருடன் ஒத்துழைத்தால்தான் நல்லமுறையில் பணிகள் நடைபெற முடியும். கேள்விகள் எந்த எந்த அமைச்சரிடம் பாக்கியிருக்கின்றன என்கிற தகவலேயும் கேட்டிருக்கிறேன். தகவல் வந்தவுடன், அமைச்சர்களுக்குத் தெரிவிக்கிறேன். அவர்கள் முறையே தங்கள் தங்கள் செயலாளர்களுக்குத் தெரிவித்து, அவர்களைத் துரிதப்படுத்தி, அமைச்சர்கள் செயல் பட்டால், உறுப்பினர்களுடைய குறைபாடுகள் நீங்கும் என்பதைத் தெரிவிக்கிறேன்.

4. நடைமுறைக்கேள்வி.

வினப்பட்டியலில் உள்ள விளுக்களுக்கு விடையளிக்க அமைச்சர் அவையில் இல்லாதிருத்தல்.

திரு. டி. மார்டின் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஸ்பீக்கர் சார். இன்றைக்குக் கொடுக்கப்பட்ட கேள்விகளில் மூன்று கேள்விகள் நிதி அமைச்சர் பேரில் உள்ளவை சபையில் வைக்கப்பட்டிருக்கின்றன. நிதி அமைச்சர் அவர்கள் கேள்வி நேரத்திற்கு சபைக்கு வரமாட்டார்கள், அவர்கள் வி. ஐ. பி. யைப் பார்க்கச் சென்றிருக்கிறார்கள் என்று லாபியில் பேசப்பட்டது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே பேசுவதை இங்கே சொல்லக் கூடாது.

திரு. டி. மார்டின் : தாங்கள் ஒவ்வொரு அமைச்சருக்கும் குறிப்பிட்ட கேள்விகளை சபையில் வைக்கிறீர்கள். அந்த விதமான கேள்விகளை வைக்கும் போது, இன்று நிதி அமைச்சர் அந்தக் கேள்விகளுக்கு பதில் கொடுக்காததால் அது பற்றிய தகவல்கள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த மன்றமும் அந்த மூன்று கேள்விகளுக்கும் விடைகளைத் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. நாளைக்கு நிகழ்ச்சி நிரல் பட்டியல் கொடுக்கும்போது, இந்த மூன்று கேள்விகளையும் சேர்த்து இணைத்துக் கொடுக்காவிட்டால், அதன் பதில்களை அறியும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும். ஆகவே, இனிமேல் அப்படிப்பட்ட கேள்விகளையும் இணைத்துக் கொடுக்க வேண்டும். அதோடு, தாங்கள் இந்த மாமன்றம் கூடும் போது, அமைச்சர்கள் வி. ஐ. பி. போன்றவர்களைப் பார்ப்பதை சபை முடிந்த பிறகு பார்க்கும் முறையை வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சனையில் இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அமைச்சர்கள் ஒவ்வொரு நாளும் விடையளிக்க வேண்டிய கேள்விகள் குறிப்பேட்டிலே பொறிக்கப் படுகின்றன. என்றாலும், திடீரென்று தவிர்க்க முடியாத காரணங்களால் அமைச்சர் அவைக்கு வர முடியாத நிலை ஏற்படும்போது, முன்கூட்டியே,